IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

O.S.No.45 /2018

Deposition of witness for PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சதாசிவம் | Caste | : | மின்வாரியத்திலிருந்து ஓய்வு பெற்றவர் |
| Father's Name | : | மார்கபந்து | Calling | : | - |
| Village | : | சிததூர், ஆந்திரமாநிலம் | Religion | : | இந்து |
| Taluk | : | | Age | : | 68 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 30 day of September, 2019.

Cross Examination Continuation (பிரதிவாதி தரப்பு)

1.1.1994-ல் நாங்கள் எழுதிக்கொண்ட கூர்சீட்டின் அடிப்படையில் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண். 186-ல் 93 செண்ட் பாகம் கொடுத்ததாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த நிலத்தையும் கூர்சீட்டின் அடிப்படையில் பாகம் வந்த மற்ற நிலங்களையும் கூர்சீட்டின் அடிப்படையில் அனுபவம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். சர்வே எண். 186-ல் 93 செண்ட்டை பொறுத்து எனது தகப்பனார் ஒரு செட்டில்மெண்ட ஆவணம் எழுதிகொடுத்துள்ளார் என்றால் சரிதான். நான் ஆந்திராவில் 10 வருடமாக குடியிருந்து வருகிறேன். அதற்கு முன்பு முத்தரசிகுப்பம் கிராமத்தில் கூட்டுகுடும்பமாக குடியிருந்தேன். நான் ஆந்திரமின்வாரியத்தில் 1970-ம் ஆண்டு பணியில் சேர்ந்து 2009-ல் ஓய்வுபெற்றேன். நான் பணியில் சேர்ந்ததிலிருந்து ஆந்திராவில் தான் குடியிருந்து வருகிறேன் என்றும், வழக்கிற்காக முத்தரசிகுப்பத்தில் குடியிருந்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும், எனது சகோதரர் கிருஷ்ணனும் கூர்சீட்டின்படி கடனை அடைப்பதாக ஒப்புக்கொண்டோம் என்றும் அவ்வாறு கடனை அடைக்காததால் செட்டில்மெண்ட் ஆவணம் பிரதிவாதிக்கு எழுதி வைக்கப்பட்டது என்றால் சரியல்ல. சர்வே எண். 186-ல் 93 செண்ட்டை பொறுத்து பெருமாள் என்பவருக்கு கடனை அடைப்பதாக ஒப்புக்கொண்டேன் என்றும், அதனால் தான் வாதி பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்கப்பட்டது என்றால்

சரியல்ல. தாவா சொத்து எனது தந்தை மற்றும் தாயார் சுயமாக சம்பாத்திய சொத்து என்றும் எனவே அவர்களுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்க உரிமை உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. செட்டில்மெண்ட் பத்திரத்தின் படி 15.04.1996 - தேதியில் பரசுராமன் என்பவருக்கு ஒரு அடமானப்பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டது என்றும், ஆனால் அந்த பத்திரம் 1997-ல் தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது சகோதரருக்கு எனது பெற்றோர் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி பிரதிவாதி 96/2011 தாக்கல் செய்தபோது எனக்கு தெரியவந்தது. செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்துசெய்யக்கோரி நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். கூர்சீட்டு கடனை அடைப்பதற்காக எழுதப்பட்டது என்றும், அதன்படி நான் நடந்துகொள்ளாததால் அந்த கூர்சீட்டு செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனது சகோதரர் கிருஷ்ணனை தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிக்கு மட்டும் சொந்தமானது என்றால் சரியல்ல. எனவே வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

(Sd/-)..R.Rajamaheswar
DISTRICT MUNSIF
KATPADI.